RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING · மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 209 | ஆகஸ்டு.1 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## மாநகராட்சி கழிவறை பராமரிப்பு செலவு ரூ.1,000 கோடியா? நயினார் நாகேந்திரன் கண்டனம்



சென்னை: ஆக.1-

பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை: சென்னை மாநகராட்சியின் 1,260 இடங்களில் உள்ள 10,000 பொதுக் கழிவறைகளை சுத்தம் செய்வதற்காக, தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.620 கோடியும், ராயபுரம் மற்றும் திரு.வி.க. நகர் ஆகிய இரண்டு மண்டலங்களில் உள்ள பொதுக் கழிவறைகளைத் தனியார்மயமாக்குவதற்கு ரூ.430 கோடியும் என திமுக ஆட்சியில் இதுவரை சுமார் ரூ.1000 கோடி செலவிடப்பட்டும் பொதுக் கழிவறைகளின் தரம் மிக மோசமாக உள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் கடும் அதிர்ச்சியளிக்கின்றன.

தற்போதுள்ள முக்கால்வாசி பொதுக் கழிவறைகள் தண்ணீர், கதவு, தாழ்ப்பாள் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் தரையெல்லாம் கறைபடிந்து, துர்நாற்றம் வீசுகின்றன என்பது திமுக அரசின் ஊழல் முகத்தை நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

ஏற்கனவே, கடந்த 2023ல் மகளிர் நலனுக்காக ரூ.4.5 கோடி நிதி செலவில் அறிமுகப்படுத்தப்பட்ட "ஷீ டாய்லெட்" என்ற நடமாடும் மகளிர் கழிவறைகள், ஓராண்டுக்குள் காணாமல் போய் விட்ட நிலையில், மீதமிருக்கும் கழிவறைகளும் மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் கிடப்பது மிகப் பெரும் சுகாதார சீர்கேட்டுக்கு வழிவகுக்கும் என்பது ஆளும் அரசுக்கு தெரியாதா?

இப்படி அலங்கோலமாகக் காட்சியளிக்கும் கழிவறைகளைப் பராமரிக்க ஆயிரம் கோடி ரூபாய் செலவானது என அரசு கணக்கு காட்டுவது யார் காதில் பூ சுற்றுவதற்காக? இவர்கள் கொள்ளையடிக்கும் மக்கள் பணம் யாருக்கு செல்கிறது, எங்கே செல்கிறது? ஊழல் முறைகேடுகளுக்குப் பெயர் போன திமுக, தனது ஆட்சியின் இறுதிக் காலத்தில் கழிவறையிலும் கொள்ளையடித்து கஜானாவை நிரப்பிக் கொள்ள துணிந்துள்ளது அருவருக்கத்தக்கது. இந்த ஆட்சியை அரியணையில் இருந்து அகற்றினால் மட்டுமே தமிழகம் புத்துணர்வு பெறும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியா, ரஷ்யா இடையிலான வர்த்தகத்துக்கு குறி; தொடரும் டிரம்பின் மிரட்டல்



வாஷிங்டன்: ஆக.1-

''ரஷ்யாவுடன் இந்தியா என்ன வர்த்தகம் செய்கிறது என்பதை பற்றி கவலையில்லை. ரஷ்யாவின் முன்னாள் அதிபர் மெட்விதேவ் மிக மோசமான விவகாரத்திற்குள் நுழைகிறார்.'' என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

நாளை முதல், அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இந்திய பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். மேலும், ரஷ்யாவிலிருந்து அதிக அளவிலான ராணுவ தளவாடங்கள் மற்றும் கச்சா எண்ணெய் வாங்குவதற்கு கூடுதலாக அபராதம் செலுத்த நேரிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நேற்று (ஜூலை 31) அதிபர் டொனால்டு டிரம்ப் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: ரஷ்யாவுடன் இந்தியா என்ன வர்த்தகம் செய்கிறது என்பதை பற்றி கவலையில்லை. இந்தியாவும், ரஷ்யாவும் தங்களது வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மேலும் கீழே கொண்டு செல்லட்டும்.

இந்தியாவுடன் அமெரிக்கா மிக குறைவான வர்த்தகமே செய்கிறது. இந்தியாவின் வரி விதிப்பு மிக அதிகமாக இருக்கிறது. உலகிலேயே அதிக வரி விதிக்கும் நாடாக இந்தியா உள்ளது. அதேபோல், ரஷ்யாவும் அமெரிக்காவும் இணைந்து கிட்டத்தட்ட எந்த வணிகத்தையும் செய்யவில்லை. அதை அப்படியே இருக்கட்டும்.

மேலும் தான் இன்னும் அதிபர் என்று நினைக்கும் ரஷ்யாவின் முன்னாள் அதிபர் மெட்விதேவ் மிக மோசமான விவகாரத்திற்குள் நுழைகிறார். அவர் தனது வார்த்தையில் கவனமாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

முன்னதாக, டிரம்ப் புதிதாக விதித்து வரும் வரி விதிப்பு குறித்து, ரஷ்யா முன்னாள் அதிபர் மெட்விதேவ் கூறியதாவது: அதிபர் டிரம்ப் ரஷ்யாவுக்கு எச்சரிக்கையை விடுத்தார். இதன் விளைவுகளை எதிர்பார்த்து உலகம் நடுங்கியது. போர்க்குணமிக்க ஐரோப்பா ஏமாற்றமடைந்தது. ரஷ்யா அதைப் பொருட்படுத்தவில்லை.

அதிபர் டிரம்ப் ரஷ்யாவுடன் விளையாட முயற்சிக்கிறார். ஒவ்வொரு புதிய இறுதி எச்சரிக்கையும் ஒரு அச்சுறுத்தலாகவும் போரை நோக்கிய ஒரு படியாகவும் உள்ளது. இவ்வாறு மெட்விதேவ் கூறியிருந்தார். மெட்விதேவ் வெளியிட்டுள்ள, இந்த பதிவிற்கு தான் இன்று டிரம்ப் மிரட்டல் விடுக்கும் வகையில் தெரிவித்துள்ளார்.

## ‘ஜெ. செய்தது வரலாற்றுப் பிழை அல்ல; புரட்சி’ : கடம்பூர் ராஜூவுக்கு ஓபிஎஸ் பதிலடி





சென்னை: ஆக.1-

"மோடியா, இந்த லேடியா" பார்த்துவிடலாம் என்று சவால்விட்டு, 37 தொகுதிகளில் அதிமுக வெற்றி பெற காரணமாக இருந்த ஜெயலலிதாவை கடம்பூர் ராஜூ குறை சொல்வதைப் பார்க்கும்போது "உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வது போன்று" என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எம்.ஜி.ஆரால் தோற்றுவிக்கப்பட்ட மாபெரும் மக்கள் இயக்கத்தை புரட்சித் தலைவரின் மறைவிற்குப் பின் நான்கு முறை, அதாவது இருபது ஆண்டு காலம் ஆட்சிக் கட்டிலில் அமைத்த பெருமைக்குரியவர் ஜெயலலிதா. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை நாடாளுமன்ற மக்களவையில் மூன்றாவது பெரிய கட்சியாக உயர்த்திய பெருமையும் ஜெயலலிதாவுக்கு உண்டு.

தமிழ்நாட்டில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் ‘இரட்டை இலை’ சின்னத்தில் வேட்பாளர்களை நிறுத்தி தொடர்ந்து இரண்டாவது முறையாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை அமைத்த பெருமைக்குரியவர். இப்படி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை உச்ச நிலைக்கு அழைத்துச் சென்ற ஜெயலலிதாவை குறை சொல்லும் விதமாக "பாஜக கூட்டணி முறிவு" என்ற வரலாற்று பிழையை அம்மா செய்துவிட்டார்கள் என்று மாண்புமிகு ஜெயலலிதாவால் அடையாளம் காட்டப்பட்ட கடம்பூர் ராஜூ கூறியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது.


1999 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் நலன் கருதி ஜெயலலிதா பாரதிய ஜனதா கட்சி கூட்டணியிலிருந்து விலகியதால்தான், 2001 ஆம் ஆண்டு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. ஜெயலலிதா இரண்டாவது முறையாக முதல்வராக பொறுப்பேற்றார். இந்த வரலாறு தெரியாமல் கடம்பூர் ராஜூ பேசியிருப்பது அவரின் அறியாமையை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

ஜெயலலிதா செய்தது வரலாற்றுப் பிழை அல்ல. அது ஒரு வரலாற்றுப் புரட்சி. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர வழிவகுத்தது. ஆனால், ஜெயலலிதாவால் சட்டமன்ற உறுப்பினராக்கப்பட்ட, அமைச்சராக்கப்பட்ட கடம்பூர் ராஜூ பேச்சுதான் வரலாற்றுப் பிழை.

"மோடியா, இந்த லேடியா" பார்த்துவிடலாம் என்று சவால்விட்டு, 37 தொகுதிகளில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற காரணமாக இருந்த ஜெயலலிதாவை கடம்பூர் ராஜூ குறை சொல்வதைப் பார்க்கும்போது "வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது" என்ற பழமொழி தான் நினைவிற்கு வருகிறது.

ஜெயலலிதாவை குறை சொல்வது என்பது "உண்ட வீட்டுக்கு இரண்டகம்" செய்வதைப் போன்றது. "ஏற்றிவிட்ட ஏணியை எட்டி உதைப்பது" மிகப் பெரிய துரோகம் என்பதை உணர்ந்து, தான் செய்த செயலுக்கு கடம்பூர் ராஜூ பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இல்லையெனில், இதற்குத் தக்க பாடத்தினை தமிழக மக்கள் புகட்டுவார்கள்." என்று தெரிவித்துள்ளார்.

## கடைகள் உரிமம் தொடர்பாக ஆய்வு செய்ய குழு: ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் பெரியசாமி தகவல்



சென்னை, ஆக.01-

வணிகர் சங்கங்களின் கோரிக்கையை ஏற்று, கடைகள் உரிமம் தொடர்பான தற்போதைய சட்டத்தை ஆய்வு செய்ய குழு அமைக்கப்படுவதாக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சியில் 201112ல் 85,649ஆக இருந்த வணிக உரிமங்களின் எண்ணிக்கை, பழனிசாமி ஆட்சியில் 202021ல் 2,05,100 ஆக உயர்ந்தது. அதேபோல, 2011 12ல் ரூ.5.40 கோடியாக இருந்த உரிமக் கட்டணம் பழனிசாமி ஆட்சியில் ரூ.12.90 கோடியாக உயர்ந்தது.

ஒவ்வொரு மாவட்டம், ஊராட்சி வாரியாக அவரது ஆட்சியில் கட்டணம் நிர்ணயித்துவிட்டு, தற்போது திமுக அரசைக் குறை சொல்கிறார் பழனிசாமி. அவரது இரட்டை வேடத்தையே இது வெளிப்படுத்துகிறது.

கிராமப்புற ஊராட்சிகளில் வணிகம். தொழில்புரிய பல்வேறு உரிமங்கள் ‘அபாயகரமானதும் மற்றும் தீங்கு விளைவிக்கும் வர்த்தக உரிமம்’ என்று பழைய நடைமுறையில் வழங்கப்பட்டு வந்தன. அதேபோல, ஒவ்வோர் ஆண்டும் இந்த உரிமம் புதுபிக்கப்பட வேண்டும் என்ற நடைமுறையும் உள்ளது. இதன் மூலம் ஊராட்சி களுக்கு வரி வருவாய் கிடைத்து வருகிறது.

அதேநேரத்தில், முறையான விதிகள் இல்லாததால் கிராம ஊராட்சிகள், தங்களது தீர்மானத்தின் அடிப்படையில் பல்வேறு வகையான கட்டணங்களை நிர்ணயம் செய்து, அதிக அளவில் கட்டணம் வசூலித்தன. இந்தக் குறைகளை நீக்கும்பொருட்டும், பல்வேறு வணிகர்களின் கோரிக்கையை ஏற்றும், தற்போது புதிதாக விதிகள் உருவாக்கப்பட்டு அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த புதிய நடைமுறையில் பல்வேறு நன்மைகள் உள்ளன.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பாக, உரிமம் பெறுவதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துவது குறித்து முதல்வரிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது. இந்த மனுவில் உள்ள விவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக, துறை அலுவலர்கள் மற்றும் வணிகர் சங்க அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் குழு கிராமப்புறங்களில் சிறு வணிகர்கள் வணிக உரிமம் பெறுவது குறித்த நடைமுறையை எளிமைப்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொண்டு, அரசுக்கு பரிந்துரைகளை வழங்கும். அதன் அடிப்படையில் புதிய சட்டத்தை நடைமுறை படுத்துவது குறித்து முடிவு மேற்கொள்ளப்படும். இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## சர்வேயர், வரைவாளர் பதவிகளுக்கு ஆக.19 முதல் 4-வது கட்ட கலந்தாய்வு: டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு

சென்னை, ஆக.01-

சர்வேயர், வரைவாளர் பதவிகளுக்கான 4வது கட்ட அசல் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு ஆகஸ்ட் 19 முதல் 22ம் தேதி வரை நடைபெறும் என டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக டிஎன்பிஎஸ்சி செயலாளர் எஸ்.கோபாலசுந்தரராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கடந்த 2022ம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்வில் நிலஅளவர் (சர்வேயர்), வரைவாளர் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான 4வது கட்ட அசல் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு சென்னையில் உள்ள டிஎன்பிஎஸ்சி அலுவலகத்தில் ஆகஸ்ட் 19 முதல் 22ம் தேதி வரை நடைபெற உள்ளது.

இதற்கு அழைக்கப்பட்டுள்ள தேர்வர்களின் பட்டியல் தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிடப்பட்டு இருக்கிறது. அழைப்பாணையை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும். இதுகுறித்து சம்பந்தப்பட்ட தேர்வர்களுக்கு எஸ்எம்எஸ் மற்றும் மின்னஞ்சல் வாயிலாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழைப்பாணை தனியே அஞ்சல் மூலம் அனுப்பப்பட மாட்டாது. சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைக்கப்படும் அனைவரும் கலந்தாய்வுக்கு அனுமதிக்கப்பட்டு தேர்வுசெய்யப்படுவர் என்பதற்கு உறுதி அளிக்க இயலாது. குறிப்பிட்ட தேதியில் சான்றிதழ் சரிபார்ப்புக்கு வரத்தவறினால் மறுவாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## "அண்ணா சொல்வதை போல..." தவெக செயலியை அறிமுகம் செய்த விஜய் பேச்சு



சென்னை: ஆக.1-

தமிழகத்தில் கடந்த 1967, 1977ம் ஆண்டு தேர்தலை போல 2026 சட்டப்பேரவை தேர்தலும் அமையும் என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார். தவெக சார்பில் ‘மை டிவிகே’ எனும் உறுப்பினர் சேர்க்கை செயலி அறிமுக விழா கட்சி தலைமை அலுவலகத்தில் நேற்று நடந்தது. இதில் செயலியை விஜய் அறிமுகம் செய்து வைத்தார்.

தொடர்ந்து, ‘ஊருக்கு ஊர், வீதிக்கு வீதி, வீட்டுக்கு வீடு வெற்றிப் பேரணியில் தமிழ்நாடு’ என்ற பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார். அப்போது, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 தலைமுறையினருக்கு உறுப்பினர் அடையாள அட்டையை விஜய் வழங்கினார்.

இதையடுத்து அவர் பேசியதாவது: தமிழக அரசியலில் 1967, 1977ம் ஆண்டு தேர்தல்களை போல, 2026 தேர்தலும் அமைய போகிறது. அந்த இரண்டு மாபெரும் தேர்தல்களிலும், ஏற்கெனவே தொடர்ச்சியாக வெற்றி பெற்று வந்தவர்களின் அதிகார பலம், அசுர பலம் என எல்லாவற்றையும் எதிர்த்துதான் புதிதாக வந்தவர்கள் வெற்றி கண்டார்கள்.

ஊருக்கு ஊர், வீதிக்கு விதி, வீட்டுக்கு வீடு என மக்களை நேரடியாக சந்தித்ததால் மட்டுமே வெற்றி பெற்றிருக்கிறார்கள். அண்ணா சொல்வதை போல, மக்களிடம் செல், மக்களிடம் இருந்து கற்றுக் கொள், மக்களுடன் வாழ், மக்களுடன் சேர்ந்து திட்டமிடு.

இதை சரியாக செய்தாலே போதும், வெற்றிப் பேரணியில் தமிழ்நாடு என்ற பிரச்சாரத்தில் அனைத்து குடும்பங்களையும் ஒன்றிணைத்து, உறுப்பினர்களாக சேர்த்து நம்மால் நிச்சயம் வெற்றி பெற முடியும். அதனால், தான் ‘மைடிவிகே’ என்ற செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து மதுரை மாநாடு, மக்கள் சந்திப்பு, சுற்றுப் பயணம் என தொடர்ச்சியாக மக்களோடு மக்களாகதான் இருக்க போகிறோம். இவ்வாறு பேசினார்.

## பிரதமர் மோடி ஆக.26ல் மீண்டும் தமிழகம் வருகை?



சென்னை: ஆக.1-

பிரதமர் மோடி வரும் ஆக. 26ம் தேதி மீண்டும் தமிழகம் வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. பிரதமர் மோடி கடந்த 26ம் தேதி 2 நாள் பயணமாக தமிழகம் வந்தார். தூத்துக்குடியில் 26ம் தேதி ரூ.4,900 கோடி மதிப்பிலான திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார்.

இதையடுத்து, அன்றிரவு விமானம் மூலம் திருச்சி சென்ற பிரதமர் மோடியை அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி சந்தித்து பேசினார். பின்னர், 27ம் தேதி கங்கை கொண்ட சோழபுரம் சென்றார். பிரகதீஸ்வரர் கோயில் வளாகத்தில் ராஜராஜ சோழன் முப்பெரும் விழாவில் கலந்துகொண்டார்.

இந்நிலையில், ஆக.26ம் தேதி பிரதமர் மோடி மீண்டும் தமிழகம் வர இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. அப்போது, சிதம்பரம் நடராஜர் கோயில், திருவண்ணாமலை கோயில்களில் தரிசனம் செய்ய இருப்பதாகவும், தரிசனத்தை முடித்துவிட்டு, சிதம்பரத்தில் மனதின் குரல் நிகழ்ச்சியில் மோடி பங்கேற்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.

# காரைக்குடி, மானாமதுரை பகுதிகளில் நாளை மின்தடை



சிவகங்கை, ஆக.1-
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சிப்காட் துணை மின்நிலையத்தில் நாளை சனிக்கிழமை (ஆகஸ்ட் 02) மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெறுகின்றன. எனவே அன்று காலை 10மணி முதல் மதியம் 2 மணி வரை மானாமதுரை,சிப்காட், ராஜகம்பீரம்,கட்டிக்குளம், மிளகனூர்,முத்தனேந்தல், தெ. புதுக்கோட்டை, கீழப்பசலை, சங்கமங்கலம், குறிச்சி, முனைவென்றி, கச்சாத்தநல்லூர், நல்லாண்டிபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என செயற்பொறியாளர் ஜான்சன் தெரிவித்துள்ளார்..

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி துணைமின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற இருப்பதால் (ஆகஸ்ட்2) சனிக்கிழமை அன்று காரைக்குடி உட்கோட்டத்திற்கு உட்பட்ட காரைக்குடி கழனி வாசல்,பாண்டியன் நகர்,விஏஓ காலனி,என்ஜீஓ காலனி,செக்காலை ரோடு, சுப்பிரமணியபுரம், வாட்டர்டேங்க்,செஞ்சை, சூடாமணிபுரம்,முத்துப்பட்டினம்,காட்டுத்தலைவாசல்,வைரவபுரம்,பர்மாகாலணி ஆகிய பகுதிகளுக்கு காலை 10 மணிமுதல் மாலை 2 மணிவரை மின் விநியோகம் இருக்காது என காரைக்குடி மின் வாரிய செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.




# காட்பாடி தாலுகா சேவூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

வேலூர், ஆக.1-
வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, சேவூர் ஊராட்சியில், தனியார் திருமண மஹாலில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் ஊராட்சி மன்ற தலைவர் ரேவதி ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி கலந்து கொண்டு பார்வையிட்டனர். இதில் ஆதார் அட்டையில் திருத்தம் கோரி மனு அளித்த பயனாளிக்கு திருத்தம் செய்த மிகப்பெரிய பணி செய்த, ஆணையினை வழங்கினார். இந்நிகழ்வின்போது காட்பாடி ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், 1வது மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, ஒன்றிய குழு துணை தலைவர் சரவணன், இதில் சமூக நலத்துறை, மின்சாரத்துறை, மாற்றுத் திறனாளிகள் துறை, வருவாய்த்துறை, மகளிர் உரிமை தொகை துறை, வேளாண்மை துறை, சிறுகுறு தொழில் துறை உட்பட அனைத்து துறை அலுவலர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டு பொது மக்களின் புகார்களை பதிவேற்றம் செய்து கொண்டனர்.



# டெல்லியில் நடைபெற்ற தேசிய அளவிலான சிலம்பம் போட்டியில் புதுப்பெருங்களத்தூர் மாணவர்கள் சாதனை

## 25 தங்க பதக்கம் உட்பட 30 பதக்கங்களை வென்று சாதனை படைத்த மாணவர்களுக்கு உற்சாக வரவேற்பு

பெருங்களத்தூர் ஆக 01
செங்கல்பட்டு மாவட்டம் பெருங்களத்தூர் பகுதியை சேர்ந்த டெல்லியில் யூத் கேம்ஸ் சிலம்பம் பெடரேஷன் சார்பில் தேசிய அளவிலான சிலம்பப் போட்டி 2 நாட்கள் நடைபெற்றது. போட்டியில் தமிழ்நாடு, தெலுங்கானா, உத்தர பிரதேசம், கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த ஆயிரத்திற்க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். இதில் தமிழ்நாட்டினை சேர்ந்த ஏராளாமனா சிலம்ப வீரர்களும் பங்கேற்றனர்.

அதன்படி புதுப்பெருங்களத்தூரில் உள்ள "பென்யால் ஸ்போர்ட்ஸ் அகாடமி" மாஸ்டர் மாணவர்கள் தேசிய அளவிலான போட்டியில் கலந்து கொண்டு 25 தங்க பதக்கம் உட்பட 30 பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளனர்.

சாதனை படைத்து திரும்பிய மாணவர்கள், சிலம்ப மாஸ்டர் காளிங்கன் ஆகியோருக்கு பெற்றோர்கள் சால்வை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர்

செய்தி மற்றும் விளம்பரங்களுக்கு
இணை ஆசிரியர் : க.சந்திரகுமார்
9585323132

# மாலை தந்தி செய்தி எதிரொலியாக திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர். சிறப்புடன் பணியாற்றும், மனிஷ்க்கு பொதுமக்கள் பாராட்டு

திருப்பூர் ஆக.01
திருப்பூர் மாநகராட்சியில் 4 மண்டலங்கள். 60 வார்டுகளைக் கொண்டது. மாநகராட்சியின் செயல்பாடுகள் அனைத்தையும். மாநகராட்சி ஆணையாளர் மனிஷ் ,ஒவ்வொரு மண்டலங்களும். செயல்படும் வேலைகளை நேரிடையாக சென்று கண்காணித்து வருகிறார். மேலும் பொதுமக்களுக்கு குறைகளை கேட்டு அதை நிவர்த்தி செய்து வருகிறார். ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்யும் குடிநீர் பணியாளர்கள்



ஒன்றாவது மண்டலம்,இரண்டாவது மண்டலம்,நான்காவது மண்டலம். இவர்களுக்கு மாத ஊதியம் வரவில்லை ஆகவே அவர்கள் மாநகராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு முன் கோரிக்கைகளை முன் வைக்க காத்து இருந்தனர். அப்போது மாலை தந்தி தலைமை நிருபர் ஆர்கே குமார் அவர்கள் சென்ற போது. ஒப்பந்த பணியாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை ஆணையாளரிடம் தெரிவிக்க வந்துள்ளோம் என்றார். உடனடியாக விசாரித்துப் பார்த்ததில் ஒப்பந்த குடிநீர் பணியாளர்கள் மாத சம்பளம் வரவில்லை என்ற விவரத்தை அறிந்தேன். உடனடியாக மாலை தந்தி இதழில் செய்திகளை வெளியிடப்பட்டது செய்திகளின் எதிரொலியாக. திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் அமித் அவர்கள். உடனுக்குடன் பணியாளர்களின் கோரிக்கைகளை சம்பளத்தை உடனே தருமாறு உத்தரவிட்டார் அடுத்த நாளே எல்லா ஊழியர்களுக்கும் சம்பளம் வந்து சேர்ந்தது. இதன் சார்பாக பணியாளர்களும் மாலை தந்தி குழுவினரும் ஆணையாளருக்கு பாராட்டுகளை தெரிவித்தனர்.



■ திருப்பூர் மாநகராட்சி வார்டு 60 கோவில் வழி பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதலாக கட்டப்பட்டு வரும் கட்டிடங்களை மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடன் இருந்தனர்




# ஓ.எம்.ஆர்.காரப்பாக்கத்தில் உள்ள தி சென்னை மொபைல்ஸ் ரியல் மீ 15 சீரியஸ் மொபைல் போனை நடிகை லாஸ்லியா அறிமுகம் செய்து வைத்தார்

காரப்பாக்கம் ஆக்.1-
சென்னை OMR சாலை, காரப்பாக்கத்தில் அமைந்துள்ள தி சென்னை மொபைல்ஸ் ஷோ ரூமில் ரியல் மீ நிறுவனத்தின் புதிய செல்போன் அறிமுக விழா நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக நடிகை லாஸ்லியா பங்கேற்று ரியல் மீ, 15 சீரியஸ் புதிய ஃபோன்களை அறிமுகம் செய்து விற்பனையை தொடங்கி வைத்தார். முன்பதிவு செய்த வாடிக்கையாளருக்கு புதிய ரியல் மீ.15 போனை லாஸ்லியா வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் சென்னை மொபைல் ஜெனரல் மேனேஜர் முகமது ராசிக், பயனியர் கார்ப்பரேஷன் மேனேஜிங் டைரக்டர் குரு பிரசாத் ஆகியோர் உடன் இருந்தனர்.

அறிமுக விழாவிற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நடிகை லாஸ்லியா, இந்திய ஸ்மார்ட்போன் சந்தையில புதுமைகளை அறிமுகப்படுத்துவதில் Realme நிறுவனம் எப்பவுமே முன்னணியில இருக்கிறது.

அந்த வரிசையில, இப்போ அவங்களுடைய புதிய Realme 15 சீரிஸ் போன்களான Realme 15 Pro 5G மற்றும் Realme 15 5G மாடல்களை தி சென்னை மொபைல்ஸ் அறிமுக செய்து வைப்பதில் மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த ரியல்மீ 15 சிரியஸில் பல்வேறு புதுமைகள், பியூஸ்ச்சர்களுடன் குறைந்த விலையில் இருப்பதாக தெரிவித்தார்.



# கூடுவாஞ்சேரி, காயிரம்பேடு தலித் ஊராட்சி மன்ற தலைவர் மீது தாக்குதல்

கூடுவாஞ்சேரி ஆக.01-
செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்குளத்தூர், ஒன்றியத்திற்குட்பட்ட காயிரம்பேடு ஊராட்சி மன்ற தலைவர், ஜெயகாந்திபுஷ்பராஜ் அவரது கணவர், மகன் கடையில் ஜூஸ் குடித்துக் கொண்டிருந்த நேரத்தில் சாதி ரீதியான கொலை வெறி தாக்குதலில் ஈடுபட்ட அதிமுக முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், தற்போது துணை தலைவருமான, திருவாக்கு அவரது உறவினர்கள், நண்பர்களுடன் இணைந்து தலித் இனத்தைச் சேர்ந்த நீ எல்லாம் ஊராட்சி மன்ற தலைவரா என்று கொலை வெறி தாக்குதலில் ஈடுபட்டது மட்டுமல்லாமல் காவல்துறைக்கு முன்கூட்டியே முந்திக்கொண்டு புகார் செய்துள்ளனர். பாதிக்கப்பட்ட ஊராட்சி மன்ற தலைவர்,ஜெயகாந்திபுஷ்பராஜ் கூடுவாஞ்சேரி காவல்துறையில் புகார் அளித்தோம் இரண்டு நாட்கள் ஆகியும் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என்று விடுதலை சிறுத்தை கட்சியின் செங்கல்பட்டு மாவட்ட வடக்கு செயலாளர், தே. தென்னவன் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.



■ திருப்பூர் மாவட்டம் மாநகராட்சி மண்டலம் 4 வார்டு 54 வீரபாண்டி பகுதியில் உள்ள பலவஞ்சிபாளையம் அடுக்குமாடி குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள் குறித்து மாநகராட்சி ஆணையாளர் எம்பி அமித் பார்வையிட்டு நேற்று ஆய்வு மேற்கொண்டார். பின்னர் பொதுமக்களுடன் குறைகளை கேட்டறிந்தார் இந்நிகழ்வில் உதவி ஆணையாளர்கள் ஆர்.வினோத் ( மண்டலம் 4) ராஜசேகர் (மண்டலம்3 ) மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்..

# அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமி மானாமதுரையில் பரப்புரை : வரலாறு காணாத உற்சாக வரவேற்பு

மானாமதுரை ஆக.01-
சிவகங்கை மாவட்டம் மானாமதுரைக்கு வருகை புரிந்த அதிமுக பொதுச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே. பழனிச்சாமி மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் என்று எழுச்சி பயணம் தமிழக முழுவதும் பரப்பரை செய்து வரும் நிலையில் மானாமதுரைக்கு நேற்று முன்தினம் வருகை புரிந்தார்.

அவரை மாவட்ட செயலாளர் பி ஆர் செந்தில்நாதன் தலைமையில் ஒன்றிய செயலாளர்கள் ம

குணசேகரன் (முன்னாள் எம்எல்ஏ) ஜெயபிரகாஷ், சிவசிவ ஸ்ரீதரன், கோபி, மானாமதுரை நகர் செயலாளர் விஜி போஸ் ஆகியோர் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.



மக்கள் வெள்ளத்தில் மிதந்து வந்த எடப்பாடியார் பொதுமக்கள் மத்தியில் பேசுகையில் திமுக ஸ்டாலின் மாடல் அரசு 50 மாதங்களில் எந்த ஒரு நலத்திட்டங்களையும் முறையாக செயல்படுத்தவில்லை என்றும் அதிமுக ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட எண்ணற்ற பல நலத்திட்டங்களை ரத்து செய்துள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

மேலும் மானாமதுரை தொகுதிக்கு அதிமுக ஆட்சி காலத்தில் அதிகப்படியான நலத்திட்டங்களை வழங்கியதாகவும் சிவகங்கை மாவட்டம் வறட்சி மாவட்டம் என்பதால் காவிரி வைகை குண்டாறு இணைப்பு திட்டத்தை எங்களது ஆட்சி காலத்தில் மாநில நிதியிலிருந்து அமல்படுத்தியதாகவும் அதை தற்போது உள்ள திமுக அரசு கிடப்பில் போட்டு முடக்கியுள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

மேலும் உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டத்தை ஸ்டாலின் தேர்தல் நோக்கத்துடன் செயல்படுத்துவதாகவும் கடந்த நான்காண்டுகளாக ஆட்சி செய்து வரும் ஸ்டாலின் யாருடன் இருந்தார் என்றும் கேள்வி எழுப்பினார்.

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் 46 பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதாகவும் அதை 45 நாட்களுக்குள் தீர்வு காண்பதாகவும் கூறுகின்றார்கள்.

ஆகவே பொதுமக்களின் பிரச்சனைகள் இவ்வளவு காலங்களாக ஸ்டாலினுக்கு தெரியாமல் இருந்துள்ளதாகவும் தற்போது பொதுமக்களின் பிரச்சினைகளை ஒப்புக்கொண்டுள்ளதாகவும் எடப்பாடி யார் கூறினார்.

மேலும் உதயநிதி கலைஞரின் பேரன் என்பதாலேயே அவர் துணை முதலமைச்சர் ஆகி உள்ளார் அதை தவிர்த்து அவருக்கு எந்த தகுதியும் இல்லை என்றும் விமர்சனம் செய்தார்.

பின்னர் போதை பொருள் மற்றும் கஞ்சா கலாச்சாரம் தமிழகத்தில் தலைவிரித்து ஆடுவதாகவும் நாங்கள் ஒவ்வொரு முறையும் போதைப் பொருள்களை கட்டுப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தாலும் ஸ்டாலின் கண்டு கொள்வதே இல்லை என்றும் குற்றம் சாட்டினார்.

மேலும் ஸ்டாலின் கூட்டணி கட்சிகளை நம்பியே தேர்தலை சந்திக்க உள்ளார் என்றும் நாங்கள் மக்களை நம்பியே தேர்தலை சந்திக்க உள்ளதாகவும் தமிழகத்தில் 234 தொகுதியில் 210 தொகுதி தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும் என்றும் உறுதி அளித்தார்

இங்குள்ள மக்களை பார்க்கையில் தற்போது மானாமதுரை சட்டமன்றத் தொகுதியில் அதிமுக வேட்பாளர் வெற்றி பெற்றதாக கருதுவதாகவும் கூறினார்.

பின்னர் மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் பாய் பாய் ஸ்டாலின் என்றும் முழக்கமிட்டு தனது பரப்புரையை முடித்துக் கொண்டார்.







# காளையார் கோவிலில் கலை இலக்கிய விழா

காளையார் கோவில் ஆக.01

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் கஸ்தூரிபாய் தெருவில் அமைந்துள்ள

ஸ்ரீமுத்து மாரியம்மன் கோவில் 66ம்ஆண்டு மது எடுப்புவிழாவின முன்னிட்டு முத்தமிழ் மன்றத்தின் 42ம் ஆண்டு கலை இலக்கியவிழா முத்தமிழ்மன்ற தலைவர் அன்புத்துரை தலைமையில் நடைபெற்றது.

குரு.போஸ், செல்லமுத்துவேலு, முத்துக்காளை நாகராசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் பச்சேரி சுந்தரராசன் கலந்து கொண்டு பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலைத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணாவியர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

மேலும் விழாவில் பார்வையாளர்களாக பங்கேற்ற அனைத்து ஆண்களுக்கும்

வேட்டிகள் வழங்கி மகிழ்வித்தார்.

பின்னர் சென்னை ஜே.ஜே.ஜானகி ராமன் வழங்கிய திரைப்பட இன்னிசை கச்சேரி வழங்கப்பட்டது. விழாவினையொட்டி அம்பாளுக்கு விசேஷ பூஜைகள் நடைபெற்றது.





# திருப்போரூர், படூர் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்

திருப்போரூர், ஆக.01

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், படூர் ஊராட்சியில் ஓ.எம்.ஆர்.சாலை, பாரத மஹால் ஜூலை (29) தமிழக முதல்வர், மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க, திமுக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் , உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில், சிறப்பு அழைப்பாளர்களாக சிறு ,குறு, தொழில் துறை அமைச்சர் , தா . மோ.அன்பரசன் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் சினேகா அவர்களை படூர் ஊராட்சி மன்ற தலைவர், தாரா சுதாகர் வரவேற்றார். திருப்போரூர் ஒன்றிய குழு தலைவர், எஸ். ஆர். எல் .இதயவர்மன், மாவட்ட கூடுதல் ஆட்சியர், நாராயணன் சர்மா ஆகியோர் முன்னிலையில் வைத்தனர். தொடர்ந்து

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மக்களை தேடி மருத்துவ, எந்த குறையாக இருந்தாலும் முகாமில் மனுக்களாக அளிக்கலாம் என்ற முதல்வர் உத்தரவின் பேரில் பல்வேறு துறைகளில் ஊரகப்பகுதிகளில் 15 துறைகள், 46 சேவைகள் சார்ந்த அரசு அதிகாரிகள்,

பொதுமக்களின் குறைகளை கேட்டு அறிந்து மனுக்களாக பெற்ற நாளிலிருந்து விரைவில் 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என்று பொதுமக்களுக்கு முதல்வரின் உத்தரவின் பேரில் உறுதி அளித்தனர். தொடர்ந்து முகாமில் சில துறைகளில் மூலம் உடனுக்குடன் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது .விரைவில் பொதுமக்கள் தங்களது மனுக்களுக்கு தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையுடன் பொதுமக்கள் கூறி சென்றனர் குறிப்பிடத்தக்கது.

# கொரோனா காலத்தில் அதிமுக ஆட்சியை போல் அமெரிக்காவில் கூட சிகிச்சை அளிக்கப்படவில்லை எடப்பாடி பழனிச்சாமி பெருமிதம்

பரமக்குடி, ஆக.1-

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் பரப்புரையில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பரப்புரை செய்தார்.

எடப்பாடி பழனிச்சாமி பேசுகையில்... பரமக்குடி நகரத்தில் நுழையும் போது எனது வாகனம் மக்கள் கூட்டத்தில் நீந்தி வநத்து.அடுத்த சட்டமன்ற தேர்தலில் பரமக்குடியில் அதிமுக வெற்றி பெறும்.



திமுக ஆட்சிக்கு வந்து 50 மாத காலமாகிறது, குடும்ப ஆட்சியாக பார்க்கப்படுகிறது. உதயநிதி ஸ்டாலினை முதலமைச்சர் ஆக்க பார்க்கின்றனர். இப்படிப்பட்ட குடும்ப ஆட்சி தேவைய??

2026 பொதுத் தேர்தலில் அதிமுக மகத்தான வெற்றி பெறுவோம். திமுக ஆட்சியில் 67% மின் கட்டணம் உயர்ந்துள்ளது.

நகராட்சி,மாநகராட்சி பகுதிகளில் மின் கட்டணம் அளவில்லாமல் உள்ளது.

திமுக ஆட்சியில் தொழில் வரி, வீட்டு வரி உயர்த்தப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்கு அதிமுக ஆட்சியில் பல்வேறு சலுகைகள் கொடுத்தது. நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம், இலவச வீடு கட்டி கொடுக்கப்பட்டது. அதிமுக ஆட்சியில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் லாபத்தில் நடந்தது.திமுக ஆட்சியில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூடப்பட்டுள்ளது. அதிமுக ஆட்சியில் நெசவாளர்களுக்கு அன்றன்று கூலி அளிக்கப்பட்டது. அதிமுக ஆட்சியில் 10 முதல் 15 நாட்கள் தாமதமாக கூலி வழங்கப்படுகிறது. அதிமுக ஆட்சி வந்தால் தினசரி நெசவாளர் கூலி வழங்கப்படும்.

14 ஆயிரத்து 400 கோடியில் காவிரி குண்டாறு திட்டம் தொடங்க நடவடிக்கை எடுத்தோம், புதுக்கோட்டையில் அடிக்கல் நாட்டினேன்.திமுக இந்த திட்டத்தை முடக்கி விட்டது. தற்போது காவேரியில் ஒரு லட்சத்து 16 ஆயிரம் தண்ணீர் வீணாக சொல்கிறது. காவிரி குண்டாறு திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் ராமநாதபுரம் மாவட்டம் செழிப்பாக இருந்திருக்கும்.

அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் காவேரி குண்டாறு திட்டம் நிறைவேற்றப்படும். இது அதிமுகவின் லட்சியம். கொரோனா காலத்தில் விலை இல்லாமல் ரேசன் பொருட்கள் கொடுக்கப்பட்டது.

கொரோனா காலத்தில் ஜிஎஸ்டி கிடையாது, டாஸ்மாக் கடைகள் இல்லை, வருமானம் இல்லாமல் ஆட்சி செய்தது அதிமுக. கொரோனா காலத்தில் 40 ஆயிரம் லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. கொரோனா காலத்தில் அமெரிக்காவில் கூட சிறப்பான சிகிச்சை அளிக்கப்படவில்லை. கொரோனா காலத்தில் கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு முதல் மாநிலம் என பிரதமர் மோடி கூறினார்.

கொரோனா காலத்தில் மன உளைச்சலில் இருந்த மாணவர்களுக்கு ஆல் பாஸ் போடப்பட்டது. 196 அரசு கலைக் கல்லூரிகளில் 96 கல்லூரிகளில் முதல்வர் இல்லை, மருத்துவ கல்லூரிகளில் டீன்கள் இல்லை, பல கல்லூரிகளில் பேராசிரியர்கள் இல்லை. திமுக ஆட்சியில் அம்மா மின் கிளினிக் மூடப்பட்டது. அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் அம்மா மினி கிளினிக் தொடங்கப்படும். உள்ளாட்சித் துறையில் 140 விருதுகள் அதிமுக ஆட்சியில் தமிழக அரசு பெற்றது.

தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் அதிமுக ஆட்சியில் முதல் இடம் இருந்தது.

திமுக தேர்தல் அறிக்கை ஐந்தரை லட்சம் காலி பணியிடமம் நிரப்பப்படும் என கூறப்பட்டது. ஆனால் ஐம்பதாயிரம் பணியிடம் மட்டுமே நிரப்பப்பட்டு உள்ளது. பகுதி நேர ஆசிரியர்கள் நிரந்தரம் செய்யப்படும் என கூறப்பட்டது, ஆனால் பணிநிரந்தரம் செய்யப்படவில்லை, தமிழக அரசு பல்லாயிரம் கோடி கடனில் உள்ளது இது, இந்த கடனை திமுக அரசு மக்களின் தலை யில்தான் கட்டுகிறது என குற்றம் சாட்டினார்.

எடப்பாடி பழனிச்சாமி வருகையை முன்னிட்டு பரமக்குடி பேருந்து நிலையம் அதிமுகவினரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு முழுவதுமாக மூடப்பட்டது. பேருந்து நிலையத்தை ஆக்கிரமித்து மேடை அமைத்து கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இதனால் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. அதேபோல் எடப்பாடி பழனிச்சாமி பரப்புரை நிகழ்ச்சிக்கு சரக்கு வாகனங்களில் கிராமங்களில் இருந்து பெண்களை அழைத்து வந்திருந்தனர்.

எடப்பாடி பழனிசாமி பேசிக்கொண்டிருந்தபோது ஒரு பெண் மயங்கினார். அருகில் இருந்த பெண்கள் அவரை தண்ணீர் தெளித்து தெளிய வைத்தனர். உடனடியாக பெண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.



# பெருநாளியில் தலா ரூ.1.86 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட சார்பதிவாளர் அலுவலக கட்டடங்கள் திறப்பு

ராமநாதபுரம், ஆக.1-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக் காட்சியின் வாயிலாக பத்திரப்பதிவு துறையின் மூலம் புதிதாக கட்டப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகங்கள் திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றதையொட்டி இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், கமுதி மற்றும் பெருநாளியில் தலா ரூ.1.86 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட சார்பதிவாளர் அலுவலக கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளிக் காட்சியின் வாயிலாக திறந்து வைத்தார்கள்.

அதனையொட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., அவர்கள் கமுதியில் புதிதாக கட்டப்பட்ட சார்பதிவாளர் அலுவலக கட்டடத்தில் குத்துவிளக்கேற்றி வைத்து அதன் உட்கட்டமைப்புகளை பார்வையிட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

இதேபோல் பெருநாளியில் புதிதாக கட்டப்பட்ட சார்பதிவாளர் அலுவலக கட்டடத்தில் பத்திரப்பதிவுத்துறை அலுவலர்கள் குத்துவிளக்கேற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் துணை பதிவுத்துறை தலைவர் திருமதி.பா.லதா அவர்கள், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.குருதிவேல்மாறன் அவர்கள், மாவட்ட பதிவாளர் திரு.ரமேஷ் அவர்கள், சார்பதிவாளர் (பொ) திருமதி.ஜானகி அவர்கள், கமுதி பேரூராட்சி தலைவர் திருமதி.அப்துல்வஹாப் சகாராணி அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# நெல்லை ஆணவக் கொலை வழக்கு: சுர்ஜித்தின் தந்தை எஸ்.ஐ. சரவணன் கைது

திருநெல்வேலி, ஆக.01-

நெல்லையில் ஐ.டி. ஊழியர் கவின் செல்வகணேஷ் கொல்லப்பட்ட வழக்கில் ஏற்கெனவே கைதான சுர்ஜித்தின் தந்தை காவல் உதவி ஆய்வாளர் சரவணன் கைது செய்யப்பட்டார். நெல்லை மாநகர போலீஸார் அவரைக் கைது செய்தனர். முன்னதாக நேற்று, கவின் செல்வகணேஷ் கொலை வழக்கை சிபிசிஐடிக்கு மாற்றி தமிழக அரசு உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது.

தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகமங்கலம் பகுதியைச் சேர்ந்த பட்டியலின சமூக இளைஞரான மென்பொருள் பொறியாளர் கவின் செல்வகணேஷ் கடந்த 27ம் தேதி திருநெல்வேலி கேடிசி நகரில் வைத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். இந்த சம்பவத்தில் இவர் காதலித்ததாக கூறப்படும் பெண்ணின் சகோதரன் சுர்ஜித் பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் சாரணடைந்த நிலையில் சுர்ஜித் மற்றும் அவரது பெற்றோரான சரவணன் மற்றும் கிருஷ்ணகுமாரி ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து சுர்ஜித்தை பாளையங்கோட்டை போலீஸார் கைது செய்தனர். அவரது பெற்றோரான சிறப்பு காவல் படை உதவி ஆய்வாளர்கள் சரவணன், கிருஷ்ணகுமாரி ஆகிய இருவரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். இருப்பினும், இருவரையும் கைது செய்தால் மட்டுமே கவின் செல்வகணேஷின் உடலை வாங்குவோம் என உறவினர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சுர்ஜித், குண்டர் தடுப்பு சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார். இந்நிலையில், சுர்ஜித்தின் தந்தை எஸ்.ஐ. சரவணன் நெல்லை மாநகர போலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# சிவகங்கை மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு திட்ட முகாம்

சென்னை, ஆக.1-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள ”உங்களுடன் ஸ்டாலின்” சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற ஆகஸ்ட் 1ஆம் தேதி காரைக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 27,28,29 ஆகிய பகுதிகளுக்கென விசாலாட்சி மஹாலிலும், இளையான்குடி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 13,14,15,16,18 ஆகிய பகுதிகளுக்கென இளையான்குடி வி.வி மஹாலிலும், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொட்டகுடி, தென்மாவலி ஊராட்சி பகுதிகளுக்கென ஆலவிலாம்பட்டி ஊராட்சியிலுள்ள சமூதாயக்கூடத்திலும், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வலசைபட்டி, கரிசல்பட்டி, முசுண்டபட்டி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென முசுண்டப்பட்டி ஊராட்சியிலுள்ள சமூதாயக்கூடத்திலும், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட காட்டாம்பூர், கருப்பூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென காட்டாம்பூர் ஊராட்சியிலுள்ள சமூதாயக்கூடத்திலும்,

மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட முத்தனேந்தல், வாகுடி, பெரும்பச்சேரி, வெள்ளிக்குறிச்சி, பெரிய ஆவாரங்காடு ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென முத்தனேந்தல் ஊராட்சியிலுள்ள சமுதாயக்கூடத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், ”உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி மனைவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடைபெறும் நாளன்று, உரிய ஆவணங்களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.



■ மதுரை செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட வாலாந்தூர் சடச்சிப்பட்டி,ஆரியபட்டி,பூதிபுரம், கட்ட கருப்பன்பட்டி பொட்டுலுப்பட்டி, நாட்டார் மங்கலம் ஊராட்சிகளுக்கு நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்"சிறப்பு முகாமினை செல்லம்பட்டி திமுக வடக்கு ஒன்றிய செயலாளர் சுதாகரன் பார்வையிட்டு பொதுமக்களின் மனுக்களை ஆய்வு செய்தார். நிகழ்வில் உசிலம்பட்டி வட்டாட்சியர்பாலகிருஷ்ணன் செல்லம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் தங்கப் பாண்டியன்,ஊராட்சி செயலாளர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




■ மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.50 மற்றும் 51 ஆகிய பகுதிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமினை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். அருகில் மேயர் இந்திராணி பொன்வசந்த் மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார், இ.ஆ.ப., , மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., , துணை மேயர் தி.நாகராஜன் , மாமன்ற உறுப்பினர் . இந்திராகாந்தி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர். (இடம்: பெரியார் பேருந்து நிலையம் சுற்றுலா தகவல் மையம்)



# மன்னர் துரைசிங்கம் அரசு கலை கல்லூரியில் காந்தியின் இளமை பருவம் திரைப்படம்

சிவகங்கை, ஆக.1-

சிவகங்கை மன்னர் துரை சிங்கம் அரசு கலைக் கல்லூரியில் நேற்று அனைத்து துறை மாணாக்கர்களுக்கும் காந்தியின் இளமைப் பருவம் திரைப்படம் திரையிடப்பட்டது. இந்நிகழ்ச்சியை கல்லூரியின் முதல்வர் முனைவர் டேவிட் நாதன் தலைமையில், நாட்டு நல பணித் திட்டம் அதிகாரிகள் முனைவர் மைக்கேல்,முனைவர் ஜெயபால் கல்லூரியின் போதை ஒழிப்பு விழிப்புணர்வு ஒருங்கிணைப்பாளர் முனைவர் சிவானந்த வேல் ஆகியோர் இந்நிகழ்வை ஏற்பாடு செய்தனர் மேலும் இந்நிகழ்வு தொடங்குவதற்கு முன்பு மாணாக்கர்கள் அனைவரும் போதை ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர் .




# சங்கரன்கோவில் வணிகவரித்துறை அலுவலர் அலுவலகக் கட்டடம் திறப்பு

சென்னை, ஆக.1-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வணிகவரித்துறையின் சார்பில் சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வணிகவரித்துறை அலுவலர் அலுவலகக் கட்டடத்தினை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததைத் தொடர்ந்து இன்று (31.07.2025) தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வணிகவரித்துறை அலுவலர் அலுவலகத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஈ.ராஜா அவர்கள் ஆகியோர் குத்துவிளக்கேற்றி பார்வையிட்டார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் 1.82 கோடி மதிப்பீட்டிலான வணிகவரி அலுவலகக் கட்டிடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்துள்ளார்கள். இக்கட்டிடத்தின் தரைத்தளத்தில் நுழைவு வாயில், அலுவலகம், கணிணி அறை, மதிய உணவு அறை, மாநில வணிகவரி அலுவலர் அறை, பெண்கள் கழிப்பறை உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. முதல் தளத்தில் கூட்ட அறை, காத்திருப்பு அறை, பதிவு அறை, துணை மாநில வணிகவரி அலுவலர் 01 அறை மற்றும் துணை மாநில வணிகவரி அலுவலர் 02 அறை, ஆண்கள் கழிப்பறை உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், வணிகவரித்துறை இணை இயக்குநர் (திருநெல்வேலி மண்டலம்) திரு.முருககுமார், வணிகவரித்துறை இணை ஆணையர் (செயலாக்க பிரிவு) செல்வி.பானுபிரியா, தென்காசி வணிகவரித்துறை துணை ஆணையர் திருமதி.கீதா, சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திருமதி. கவிதா, சங்கரன்கோவில் வணிகவரித்துறை அலுவலர் திருமதி.பார்வதி, செயற்பொறியாளர் திரு.ஜான் ஆஷிர், உதவி செயற்பொறியாளர் திரு. அசோக், சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திரு.லாலா சங்கரபாண்டியன், மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மானாமதுரை கீழ்கரையில் உள்ள வீரஅழகர் கோயில் ஆடிமாத பிரம்மோற்சவ விழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது






மானாமதுரை, ஆக.1-

மானாமதுரை கீழ்கரையில் வீர அழகர் கோயில் உள்ளது. இக்கோயிலில் மதுரை அழகர்கோயிலை போல சித்திரை திருவிழா ஆடித்திருவிழாக்கள் விமரிசையாக கொண்டாடப்படுவது வழக்கம். இந்தாண்டுக்கான ஆடிமாத பிரம்மோற்சவ விழா நேற்று காலை 7.45 மணிக்கு துவங்கியது.

முன்னதாக அதிகாலை சுந்தரராஜபெருமாளுக்கும் ஸ்ரீதேவி, பூதேவிக்கும் சிறப்பு திருமஞ்சனம் நடந்தது. சிறப்பு அபிஷேகத்திற்கு பின் வெள்ளிக்கவச அலங்காரத்தில் உற்சவர் சுந்தரராஜபெருமாள் பக்தர்களுக்கு காட்சியளித்தார். பின்னர் கோயில் முன் உள்ள கொடிமரத்திற்கு கோயில்குருக்கள் கோபிமாதவன் பட்டர் தலைமையில் சந்தனம், பால், பன்னீர், இளநீர் உள்ளிட்ட திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் நடந்தது. உற்சவர் வீரஅழகருக்கு காப்பு அணிவிக்கப்பட்டு மகா தீபராதனை நடைபெற்றது.




■ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் 27 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் 13.54 கோடி ரூபாய் செலவிலும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை சார்பில் 60 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் தடய அறிவியல் துறை சார்பில் 3 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள போதை மருந்து ஆய்வுப் பிரிவுகள் ஆகியவற்றை திறந்து வைத்து, 229.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மதுரை மத்திய சிறைச்சாலை கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், இ.ஆ.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் சீமா அகர்வால், இ.கா.ப., காவல்துறை இயக்குநர் (தலைமையிடம்) வினீத் தேவ் வான்கடே, இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சைலேஷ் குமார் யாதவ், இ.கா.ப., சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை தலைமை இயக்குநர் முனைவர் மகேஷ்வர் தயாள், இ.கா.ப., தாம்பரம் காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக், இ.கா.ப சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண், இ.கா.ப., தடய அறிவியல் துறை இயக்குநர் முனைவர் சிவப்பிரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# தோவாளை வட்டத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் ஆய்வு

கன்னியாகுமரி, ஆக.1-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை கடந்த 15.07.2025 அன்று துவக்கி வைத்ததைத்தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி, அவர்களின் பகுதிகளிலேயே நேரிடையாக சென்று முகாம்கள் நடத்தி கோரிக்கை மனுக்களை பெற, உங்களுடன் ஸ்டாலின் என்ற அற்புதமான திட்டம் அக்டோபர் மாதம் 15ம் தேதி வரை நடத்திட அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதனடிப்படையில் இன்று தோவாளை வட்டம் தாழக்குடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதி மக்களுக்கு தாழக்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நெல் கொள்முதல் நிலையக் கட்டிடத்தில் நடைபெற்ற முகாமினை நேரில் பார்வையிட்டு, முகாம் செயல்பாடுகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் கேட்டறியப்பட்டு, தகுதியானவர்களுக்கு உடனடியாக ஆணை வழங்கிட அறிவுறுத்தப்பட்டது.

மேலும் தொடர்ந்து 2 பயனாளிக்கு குடும்ப அட்டையில் பெயர்மாற்றத்திற்கான ஆணை மற்றும் சான்றிதழுக்கான ஆணை உடனடியாக வழங்கப்பட்டது. பதில் கிடைக்க பெறாத பொதுமக்கள் தங்களை நாடி வந்து கேட்கும் போது தகுந்த பதில்களை அவர்களுக்கு வழங்குவதோடு, அவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்கள்.

# "அன்பு கரங்கள்" நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் வரவேற்பு

சிவகங்கை, ஆக.1-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மிகவும் வறிய நிலையில் உள்ள குடும்பங்களில், தங்கள் இரண்டு பெற்றோரையும் இழந்து, தங்களது உறவினர்களின் பாதுகாப்பில் குழந்தைகள் வளர்ந்து வருவதை அறிந்து, இக்குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில், அவர்களது பள்ளிப் படிப்பு வரை இடைநிற்றல் இன்றி அவர்கள் கல்வியைத் தொடர, 18 வயது வரை மாதம் 2,000 ரூபாய் உதவித்தொகை வழங்குவதோடு மட்டுமல்லாமல், பள்ளிப்படிப்பு முடித்தவுடன் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறிவித்தார்கள்.

இவ்வறிவிப்பிற்கிணங்க, இரண்டு பெற்றோரையும் இழந்து, தங்களது உறவினர்களின் பாதுகாப்பில் வளர்ந்து வரும் குழந்தைகள் மற்றும் ஒரு பெற்றோரை இழந்து, மற்றொரு பெற்றோரால் பராமரிக்க இயலாத குழந்தைகளுக்கு, அவர்களின் 18 வயது வரையிலான மாதந்திர உதவித்தொகை "அன்பு கரங்கள்" நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும்.

இச்சீரிய திட்டத்தின் கீழ் ஆதரவற்ற குழந்தைகள் (பெற்றோர் இருவரையும் இழந்தவர்கள்), கைவிடப்பட்ட குழந்தைகள் (பெற்றோரில் ஒருவரை இழந்து, மற்றொரு பெற்றோர் குழந்தையை கைவிட்டுச்சென்று இருப்பின்), ஆதரவு தேவைப்படும் குழந்தைகள் (பெற்றோரில் ஒருவரை இழந்து, மற்றொரு பெற்றோர் மாற்றுத்திறன் தன்மை (Physically/mentally challenged) கொண்டவராக இருந்தால்), ஆதரவு தேவைப்படும் குழந்தைகள் (பெற்றோரில் ஒருவரை இழந்து, மற்றொரு பெற்றோர் சிறையில் இருந்தால்), ஆதரவு தேவைப்படும் குழந்தைகள் (பெற்றோரில் ஒருவரை இழந்து, மற்றொரு பெற்றோர் உயிருக்கு ஆபத்தான நோய்களுடன் வாழ்ந்து வந்தால்) விண்ணப்பிக்கலாம்.

மேலும், "அன்பு கரங்கள்" நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் பயன்பெற அவரவர் பகுதிகளில் நடைபெறும் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாகவோ அல்லது மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுலவகத்தில் நேரிலோ குடும்ப அட்டையின் நகல், குழந்தையின் ஆதார் அட்டையின் நகல், குழந்தையின் வயது சான்று நகல் (பிறப்புச்சான்றிதழ்/ கல்வி மாற்றுச் சான்றிதழ்/ மதிப்பெண் சான்றிதழ்), குழந்தையின் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல் ஆகிய ஆவணங்களுடன் விண்ணப்பித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161